மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சாத்தூர்.

முன்னிலை - திருமதி.P.அனுராதா, B.A.,B.L.,
மாவட்ட உரிமையியல் நீதிபதி மற்றும்
நீதித்துறை நடுவர் எண்.1, சாத்தூர்.

2023ம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 11ம் நாள் திங்கட்கிழமை

இ.ம.எண்.03/2023
உள்
அசல் வழக்கு எண்.05/2022
-------------

சுப்புலட்சுமி .... மனுதாரர்/வாதி

/எதிர்/

1. ராமசாமித்தேவர் ... 1ம் எதிர்மனுதாரர்/1ம் பிரதிவாதி

2. சார்பதிவாளர், பந்தல்குடி
3. மாவட்ட பதிவாளர்,
விருதுநகர் மாவட்டம்
4. தமிழக அரசுக்காக
ஆளுநர் பிரதிநிதி
மாவட்ட ஆட்சியர், விருதுநகர் ... 2 முதல் 4 எதிர்மனுதாரர்கள்/
2 முதல் 4 உத்தேச பிரதிவாதிகள்

இந்த மனு 26.07.2023ம் தேதி இந்நீதிமன்ற கோப்பிற்கு எடுக்கப்பட்டு என் முன்பு 31.08.2023ம் தேதி இறுதி விசாரணைக்கு வந்தபோது மனுதாரர்/வாதி தரப்பில் வழக்கறிஞர் திரு.எஸ்.இராஜேஸ் அவர்கள் ஆஜராகியும், 1ம் எதிர்மனுதாரர்/1ம் பிரதிவாதி தரப்பில் வழக்கறிஞர் திரு.எல்.முரளி அவர்கள் ஆஜராகியும், மனுதாரர் தரப்பு மனுவுரை மற்றும் எதிர்மனுதாரர் தரப்பு எதிர்உரையை நன்கு கேட்டறிந்தும், சாட்சிய சான்றாவணங்களை நன்கு பரிசீலனை செய்தும் இன்று இந்நீதிமன்றம் வழங்கும் . . .

## உத்தரவு

இம்மனுவானது உரிமையியல் நடைமுறைச்சட்டம் கட்டளை 6 விதி 17 மற்றும் பிரிவு 151-ன் கீழ் அபிடவிட்டில் கண்டுள்ள காரணங்களினால், தாவா அசல் வழக்கில் பிராதில் மனுவில் கண்டவாறு சீர்திருத்தம் மேற்கொள்ள

அனுமதிக்க உத்தரவிடக்கோரி 19.07.2023ம் தேதி மனு தாக்கல் செய்து வாதிடப்பட்டது.

**2) மனுதாரர்/வாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள அபிடவிட்டு சுருக்கம்:-**

மனுதாரர் தாக்கல் செய்துள்ள அசல் வழக்கில் விசாரணைக்காக தற்போது வாய்தா ஏற்பட்டு, விசாரணைக்காக மனுதாரர் வழக்கறிஞரை சந்தித்து வழக்கு பற்றி கேட்ட சமயத்தில் மனுதாரர் பிரதிவாதிகள் தாவா வழக்கில் 08.07.2022ம் தேதி தாக்கல் செய்துள்ள எதிர்வழக்குரையில் தபசில் சொத்து சம்பந்தமாக பிரதிவாதிகள் ஏற்படுத்திய மோசடி கிரையப்பத்திரம் பற்றி விபரங்கள் மனுதாரருக்கு தெரிய வந்துள்ளது. தாவா சொத்து மனுதாரர் தகப்பனாரின் தகப்பனார் சுப்பையாத் தேவருக்கு பூர்விகமாக பாத்தியப்பட்டதாகும். தாவா சொத்தின் அனுபவம் நாளது தேதி வரை மனுதாரர் வசமே இருந்து வருகிறது. மனுதாரர் தகப்பனாரோ, அவரது உடன்பிறந்தவர்களோ, எக்காலத்திலும் மேற்படி பிரதிவாதியின் தகப்பனார் குருசாமி தேவருக்கு தபசில் சொத்துக்களைப் பொறுத்து கிரையம் எழுதிக் கொடுத்திருக்க வாய்ப்பில்லை. மேற்படியார்களுக்கு பிரிவினையில்லாத இந்து கூட்டுக்குடும்ப சொத்தைப் பொறுத்து தனியாக கிரையப்பத்திரம் பதிந்து கொடுக்கவும், அவர்களுக்கு உரிமை இல்லை.

மனுதாரர் தகப்பனாருக்கு பூர்விகமாக பாத்தியப்பட்ட சொத்தைப் பொறுத்து பிரதிவாதி குறிப்பிடும் காலத்தில் எவ்வித பாகப்பிரிவினையும் சுப்பையாத்தேவரின் வாரிசுகளிடையே செய்யப்படவில்லை. அவ்வாறு இருக்கும்பட்சத்தில் உண்மைக்கு புறம்பான சங்கதிகள் பிரதிவாதிகளின் தகப்பனார் குருசாமி தேவர், சுப்பையா தேவரின் வாரிசுகள் தனக்கு தபசில் சொத்தை அடமானம் வைத்தார் என்றும், கிரையம் எழுதிக் கொடுத்தார் என்றும் குறிப்பிட்டுள்ள சங்கதிகள் 08.07.2022ம் தேதி எதிர்வழக்குரையை தாக்கல் செய்த போதே மனுதாரருக்கு தெரிய வந்துள்ளது. பிரிக்கப்படாத இந்து கூட்டுக்குடும்ப சொத்தில் மனுதாரருக்கு சட்டப்படி மனுதாரர் தகப்பனாருக்குரிய 3 பங்கில் மனுதாரருக்குரிய பங்கு உள்ளது. தபசில் சொத்தினைப் பொறுத்து மனுதாரருக்குரிய பாகத்தை மோசடி

செய்யும் நோக்கில் பிரதிவாதியின் தகப்பனார் மோசடியாக மனுதாரர் தாத்தா சுப்பையாவின் சொத்துக்களை கிரையம் பெற்றுள்ளதாக குறிப்பிட்டுள்ள கிரையப்பத்திரங்கள் சட்டப்படி செல்லத்தக்கதல்ல. மேற்படி கிரையத்தினால் குருசாமி தேவருக்கோ, அவரது வாரிசுகளுக்கோ தபசில் சொத்தின் மீது எவ்வித உரிமை மூலமும் ஏற்படாது. இந்து கூட்டுக்குடும்ப சொத்தில் பிரிக்கப்படாத சொத்தினைப் பொறுத்து மோசடியாக பிரதிவாதிகளின் தகப்பனார் குருசாமித் தேவர் மோசடியாக பெற்றுள்ள கிரையங்கள் சட்டப்படி செல்லத்தக்கதல்ல. அவற்றால் தபசில் சொத்தில் உள்ள மனுதாரர் உரிமையும், அனுபவமும் எவ்வகையிலும் பாதிப்படையாது. மேற்படியாகர்கள் சட்டத்திற்கு புறம்பாக மோசடியாக ஏற்படுத்திய கிரையப்பத்திரத்தை செல்லாது எனவும், அவை வெறிதானது மற்றும் விழலானது என்றும் விளம்புகை செய்யவும், மேற்படி கிரையப்பத்திரங்களை ரத்து செய்யவும் தாவா அசல் வழக்கின் பிராதினை சீர்திருத்தம் செய்ய வேண்டியதாக இருக்கிறது. அவ்வாறு சீர்திருத்த நடவடிக்கை மேற்கொள்ளும்பட்சத்தில் தாவா அசல் வழக்கிற்கு சார்பதிவாளர், பந்தல்குடி அவர்களும், மாவட்ட பதிவாளர் விருதுநகர் அவர்களும் அவசியக் கட்சிக்காரர்கள் ஆவார்கள். மேற்படியார்களை வழக்கின் தரப்பினர்களாக சேர்க்க வேண்டி நீதிமன்றத்தில் இடைக்கால மனுவான இ.ம.எண்.01/2022 என்ற இடைக்கால மனுவினை தாக்கல் செய்துள்ளார். மேற்படி மனுவை விசாரணை செய்த நீதிமன்றம் கடந்த 26.04.2023ம் தேதி அனுமதித்து உத்தரவிட்டது. அதனடிப்படையில் மேற்படி அரசு அதிகாரிகளை தாவா வழக்கில் தரப்பினர்களாக சேர்க்க வேண்டியதாக உள்ளது. மேலும் தாவா வழக்கில் பிரதிவாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட எதிர்வழக்குரையில் வாதியின் தகப்பனார் ராமசாமி தேவர் பிரதிவாதியின் தகப்பனார் குருசாமித் தேவருக்கு எழுதிக் கொடுத்ததாக குறிப்பிடப்படும் 21.04.1964ம் தேதிய பந்தல்குடி சார்பதிவாளர் அலுவலக ஆவண எண்.268/1966 கிரையப்பத்திரம் சட்டப்படி செல்லத்தக்கதல்ல. அவை வெறிதானது மற்றும் விழலானது ஆகும். தபசில் சொத்து பிரிவினை செய்யப்படாத இந்து கூட்டுக்குடும்ப சொத்தாகும். அவ்வாறு உள்ள நிலையில் மேற்படி பிரிக்கப்படாத இந்து கூட்டு குடும்ப சொத்தினைப் பொறுத்து

மோசடியாக பிரதிவாதியின் தகப்பனார் ஏற்படுத்திய கிரையப்பத்திரம் சட்டப்படி செல்லத்தக்கதல்ல. அவை வெறிதானது மற்றும் விழலானது என கோரியும், மேற்படி கிரையப்பத்திரத்தை ரத்து செய்யக்கோரியும், மனுதாரர் தரப்பில் தாவா அசல் வழக்கின் பிராதினை சீர்திருத்தம் செய்ய வேண்டியதாக உள்ளது. அவ்வாறு இல்லாவிட்டால் மனுதாரருக்கு ஏராளமான கஷ்ட, நஷ்டம் ஏற்படக்கூடும். தாவா வழக்கினையும் முழுமையாக தீர்மானிக்க இயலாத நிலையும் ஏற்படக்கூடும். எனவே, அசல் வழக்கில் பிராதில் சீர்திருத்தம் மேற்கொள்ள அனுமதி வேண்டி மனு தாக்கல் செய்து வாதிடப்பட்டது.

**<u>3) 1ம் எதிர்மனுதாரர்/1ம் பிரதிவாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள எதிருரை சுருக்கம்:-</u>**

மனுதாரர்/வாதி நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி வழக்கு தாக்கல் செய்துள்ளார். வாதி பிராதில் கோரியுள்ள பரிகாரத்திற்கும், பிராது தபசில் சொத்திற்கும் உத்தேச 2 முதல் 4 எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகளுக்கும் எந்தவிதமான சம்பந்தமில்லை என்றும், உத்தேச 2 முதல் 4 பிரதிவாதிகள் பேரில் எந்தவித வழக்குமூலமும் தாவா பிராதில் இல்லை. உத்தேச 2 முதல் 4 பிரதிவாதிகள் பேரில் வழக்குமூலம் இல்லை என்பதால் அவர்கள் தாவா வழக்கிற்கு அவசியமற்ற கட்சிக்காரர்கள் என்பதால் அவர்களை சேர்த்து பிராதை சீர்திருத்தம் செய்ய வேண்டிய அவசியம் கிடையாது. உத்தேச 2 முதல் 4 பிரதிவாதிகள் பேரில் எந்தவித பரிகாரமும் தாவா பிராதில் இல்லை.

மனுதாரர்/வாதி பிறப்பதற்கு 20 வருடங்களுக்கு முன்பே வாதியின் தகப்பனார் சொத்தை விற்பனை செய்துவிட்டதால் மனுதாரர்/வாதிக்கு பிராது தபசில் சொத்தில் எந்தவித உரிமை, பாத்தியம், அனுபவம் கிடையாது. இந்து வாரிசு சட்டப்படி வாதி பிறப்பதற்கு முன்பே வாதியின் தகப்பனார் அவரது சகோதரர்களிடையே பிராது சொத்து சம்ப்நதமாக பாகபிரிவனை செய்து கொண்டதால் வாதி தகப்பனாருக்கு அது தனிப்பட்ட சொத்து ஆகும். எனவே, வாதிக்கு பிராதில் சொத்தில் எந்தவித உரிமையும் கிடையாது. வாதிக்கு பிராது சொத்து பூர்விக சொத்து கிடையாது. வாதிக்கு உரிமையில்லாத,

அனுபவமில்லாத பிராது சொத்து சம்பந்தமாக கோரியுள்ள சீர்திருத் பரிகாரம் அவருக்கு கிடைக்கத்தக்கதல்ல. பிராது சொத்தை விற்பனை செய்த வாதியின் தகப்பனார் உயிருடன் இருக்கும்வரை பிராது சொத்து சம்பந்தமாக எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்கவில்லை. வாதியின் தகப்பனாரும், அவரது சகோதரர்களும் பிராது சொத்தை பிரதிவாதிக்கு விற்பனை செய்துவிட்டதால் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. வாதியின் தகப்பனார் இறந்தபின்பு வாதி கிரைய பத்திரத்தை மோசடி ஆவணம் என கூறி சீர்திருத்த மனு தாக்கல் செய்திருப்பது சட்டப்படி செல்லாது. பிரதிவாதியின் தகப்பனாருக்கு வாதியின் தகப்பனார் கிரைய பத்திரம் எழுதிக் கொடுத்து சுமார் 56 ஆண்டுகளுக்கு மேலாகிவிட்டது. இந்திய சாட்சிய சட்டம் 90ன்படி மேற்படி ஆவணம் சட்டப்படி செல்லத்தக்க ஆவணம் ஆகும். மேற்படி ஆவணம் சம்பந்தமாக வாதி எந்தவித பரிகாரமும் கேட்க முடியாது. தாவா பிராதில் சொல்லியுள்ள வழக்குமூலம், செலுத்தியுள்ள நீதிமன்றக்கட்டணம், கோரியுள்ள பரிகாரங்கள் எல்லாம் வாதி தாக்கல் செய்துள்ள மனுவில் சொல்லியுள்ள காரணங்களுக்கு சம்பந்தமில்லை. வாதி தாவா வழக்கை வாபஸ் பெற்று புதிதாக 2 முதல் 4 உத்தேச பிரதிவாதிகளை சேர்த்து அதற்குண்டான ஆவணங்களை தாக்கல் செய்து வேறு ஒரு வழக்குமூலத்தில் உரிய நீதிமன்ற கட்டணம் செலுத்தி தான் வழக்கு தாக்கல் செய்யமுடியும். தாவா வழக்கில் 2 முதல் 4 உத்தேச எதிர்மனுதாரர்கள்/ பிரதிவாதிகள் பேரில் சேர்த்து வழக்கை சீர்திருத்தம் செய்ய மனு தாக்கல் செய்ய முடியாது. தாவா வழக்கில் வாதியின் தகப்பனார் உடன்பிறந்த சகோதரர்கள் மற்றும் அவர்களுடைய வாரிசுகளை சேர்க்காமல் 2 முதல் 4 உத்தேச பிரதிவாதிகளை மட்டும் சேர்க்க மனு தாக்கல் செய்திருப்பது சட்டப்படி செல்லாது. வாதியின் உடன்பிறந்த சகோதர, சகோதரிகளை வேண்டுமென்றே தரப்பினராக சேர்க்காமல் வாதி பிராது தாக்கல் செய்துள்ளார். தாவா வழக்கை தீர்மானிக்க வாதியின் தகப்பனார் உடன்பிறந்த சகோதரர்கள் மற்றும் அவர்களுடைய வாரிசுகள், வாதியின் உடன்பிறந்த சகோதர, சகோதரிகள் முக்கிய கட்சிக்காரர்கள் ஆவார்கள். முக்கிய கட்சிக்கார்களை மறைத்துவிட்டு வழக்கிற்கு தேவையில்லாத கட்சிக்காரர்களை சேர்த்து சீர்திருத்த மனு தாக்கல்

செய்திருப்பது சட்டப்படி நிலைநிற்கத்தக்கதல்ல. எனவே, தாவா சீர்திருத்த மனுவை 1ம் எதிர்மனுதாரர்/1ம் பிரதிவாதி செலவு தொகையுடன் தள்ளுபடி செய்து உத்தரவிட வேண்டுமென்று எதிருரை தாக்கல் செய்து வாதிடப்பட்டது.

4) இந்த மனுவில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சனை யாதெனில் இம்மனு அனுமதிக்கக்கூடியதா? இல்லையா? என்பதைக் காண்பதேயாகும்.

5) மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர் தரப்பில் எவ்வித வாய்மொழி சாட்சியமும், ஆவண சாட்சியமும் இல்லை.

6) இருதரப்பு வாதங்களும் கேட்கப்பட்டது. அபிடவிட்டு, எதிருரை மற்றும் வழக்கு கோப்பு பரிசீலிக்கப்பட்டது.

**7) தீர்வு:-**

மனுதாரரால் தாக்கல் செய்யப்பட்டிருக்கும் மனுவும் அது குறித்து வாதிடப்பட்டதும் ஏற்புடையதாக உள்ளது. எதிர்மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டிருக்கும் எதிருரையும் அது குறித்து வாதிடப்பட்டதும் இந்த மனுவில் இந்த சூழ்நிலையில் இந்த வழக்கில் ஏற்புடையதாக இல்லை. மனுதாரரால் தாவா அசல் வழக்கில் பிராதில் மனுவில் கண்டவாறு சீர்திருத்தம் மேற்கொள்ள அனுமதிக்க உத்தரவிடக்கோரி 19.07.2023ம் தேதி தாக்கல் செய்யப்பட்டிருக்கும் இந்த மனுவினை தள்ளுபடி செய்யும்பட்சத்தில் மனுதாரருக்கு தனது தரப்பை நிரூபணம் செய்ய முடியாமல் போய் ஈடு செய்ய முடியாத இழப்பும் நஷ்டமும் ஏற்படக்கூடும். மேலும், இம்மனுவினை தள்ளுபடி செய்யும்பட்சத்தில் இவ்வழக்கு சம்பந்தமான வேறு வழக்குகளும் எழக்கூடும். உத்தேச பிரதிவாதிகள் இவ்வழக்கைப் பொறுத்து அவசிய தரப்பினரா? இல்லையா? என்பதைப் பொறுத்து வழக்கு விசாரணையின்போது மட்டுமே முடிவு செய்ய முடியும். மனுதாரரால் தாக்கல் செய்யப்பட்டிருக்கும் இம்மனுவினை அனுமதிக்கும்பட்சத்தில் எதிர்மனுதாரருக்கு எவ்வாறு இழப்பு ஏற்படும் என்பது குறித்து எதிருரையில் எதிர்மனுதாரர் குறிப்பிட்டு கூறவில்லை. எனவே, மனுதாரரால் தாக்கல் செய்யப்பட்டிருக்கும் இந்த மனுவினை அனுமதிக்க வேண்டியது நீதியின்பால் அவசியமாயும், நியாயமாயும் உள்ளது என இந்த நீதிமன்றம் முடிவு செய்து மனுதாரரால் தாக்கல் செய்யப்பட்டிருக்கும் இந்த மனுவினை அனுமதித்து

உத்தரவிடுகிறது.

இறுதியாக, இவ்வழக்கில் தாக்கல் செய்யப்பட்டிருக்கும் மனு, எதிருரை வாதுரைகள் நீதியின்பால் கொண்ட அக்கறை ஆகியவற்றை கருத்திற்கொண்டு, தாவா அசல் வழக்கில் பிராதில் மனுவில் கண்டவாறு சீர்திருத்தம் மேற்கொள்ள அனுமதிக்க உத்தரவிடக்கோரி 19.07.2023ம் தேதி மனுதாரரால் தாக்கல் செய்யப்பட்டிருக்கும் இம்மனுவினை அனுமதித்து இந்த நீதிமன்றம் உத்தரவிடுகிறது. மனுவின் தன்மை கருதி செலவு தொகை யாதுமில்லை.

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் சரிபார்த்து பிழைநீக்கம் செய்யப்பட்டு 2023ம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 11ம் நாள் இத்திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

P ANURADHA Digitally signed by P ANURADHA

மாவட்ட உரிமையியல் நீதிபதி
சாத்தூர்.

மனுதாரர்/வாதி தரப்பு சாட்சி சான்றாவணங்கள்:- இல்லை
எதிர்மனுதாரர்/பிரதிவாதி தரப்பு சாட்சி சான்றாவணங்கள்:- இல்லை

P ANURADHA Digitally signed by P ANURADHA

மாவட்ட உரிமையியல் நீதிபதி
சாத்தூர்.